
Founded 13-02-1849

# வர்த்தக சபை
# செய்தி வெளியீடு

புதுச்சேரி.

**வெளியீடு : 3**

**அக்டோபர் - டிசம்பர் : 2011**



## தலைவரிடமிருந்து.......

அன்பார்ந்த உறுப்பினர்களே !

"தானே" புயல் புதுச்சேரியை வரலாறு காணாத அளவிற்கு புரட்டிப் போட்டுள்ளது. நமது மாநிலம் கடுமையான சேதத்திற்குள்ளாகி உள்ளது வரலாறு காணாத சோகம் நமது வர்த்தகசபையும் அச்சோகத்தில் பங்கேற்கிறது.

மூன்றாவது காலாண்டு இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தக் காலாண்டில், மூன்று நிர்வாகக் குழுக் கூட்டமும், ஓர் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டமும் நடைபெற்றுள்ளது. அவைகளில் பல முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. குறிப்பாக, பொதுக்குழுக் கூட்டத்தோடு 2000-2011-ம் வரையிலான உறுப்பினர்கள் கையேடு (Members Directory) மற்றும் ஓர் இணையதளத்தை உருவாக்குவது எனவும், அதனை பொதுக்குழுக்கூட்டம் முடிந்தவுடன் வெளியிடுவது என்றும் வர்த்தக சபைக்கென இணைய தளத்தை தொடங்கி வைப்பது, என்று முடிவு செய்தோம் வர்த்தக சபைக்கு சொந்தமான தெற்கு புல்வாரிலுள்ள காலியிடத்தில் புதுச்சேரியில் உள்ள வணிகர்கள், மற்றும் பல்வேறு நிறுவனங்கள் பயன்பெறவும் அரசுக்கு வருவாய் ஈட்டித்தரவும் ஏற்றுமதி இறக்குமதிக்கு உதவக்கூடிய வகையில் வர்த்தக மையம் (Trade Centre) அமைப்பது, புதியதாகச் சேரும் உறுப்பினர்களின் நுழைவுக்கட்டணம் (Entrance Fees) மற்றும் ஆண்டுச் சந்தாவை (Subscription) உயர்த்துவதற்கான விதி திருத்தம் செய்வது (Amendment) அதனை உறுப்பினர்களுக்கு வழங்குவது மற்றும் சில்லரை வணிகத்தில் பன்னாட்டு நேரடி முதலீட்டினை எதிர்த்து கடையடைத்து நமது உணர்வினை வெளிப்படுத்தி புதுவை அரசின் கவனத்தை ஈர்த்தது மத்திய அரசு மேற்படி முடிவினை திரும்பப்பெற வைப்பது பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது வர்த்தக சபையின் அலுவலகத்தின் முதல் மாடியில் வாடகைக்கு இருந்து வந்த தொழிலாளர் நல அதிகாரி (சமரசம்) அலுவலகம் 30-11-2011 அன்றுடன் காலி செய்து இடத்தை நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தினைச்சீர்செய்து வாடகைக்கு விடுவதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மற்றும் வாடகைக்கு இருந்து வரும் வாடகைதாரர்களில் சிலரை 31-12-2011 க்குள் காலி செய்ய அறிக்கை (Notice) அனுப்பப்பட்டது. அவர்களின் பிரதிபலிப்பு (Response) எவ்வாறு உள்ளது என்பதை கவனித்து வருகிறோம்.

புதிதாக நாம் உருவாக்கியுள்ள இணையதளத்தில் வர்த்தக சபையின் தொடக்க நாள் முதற்கொண்டு 2000-ம் ஆண்டு சங்கப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட நாள் வரையிலான செயல்பாடுகள் மற்றும் அனைத்து விபரங்கள், பொதுமக்கள், வணிகர்கள், நமது உறுப்பினர்கள் எளிதாகத் தெரிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. www.chambredecommerce.in என்ற நமது இணைய தள முகவரியில் தொடர்பு கொண்டு தேவைப்படும் விவரங்கள், தகவல்கள் பெறலாம்.

நமது வர்த்தக சபையின் நடவடிக்கைகளை உறுப்பினர்களுக்கு தெரிவிக்கும் வகையில் வெளியிடப்படும் நமது காலாண்டு செய்திவெளியீடு இதழினைப் பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வர்த்தகசபை முன் இல்லாத வகையில் சிறப்போடு செயல்படுகிறது என்பதைப் பல்வேறு தரப்பினர் பாராட்டுகின்றனர். அவைகள் உறுப்பினர்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பால், ஆதரவால் மட்டுமே செய்ய முடிந்தது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கின்றேன். எங்களது பணி சிறப்பாய் தொடர்ந்திட உங்களது ஆதரவினை நல்கிடும்படி மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி ! வணக்கம்

அன்புடன்.

**கே.ஏ. செண்பகராஜன்**

வாழ்க
வளமுடன்



Wishes from :
S. GUNASEKARAN
Mobile : 93454 12399

MANI
ELECTRONICS

No. 271/2, Maraimalai Adigal Salai,
G.R.R.Zone, (Opp. to Botanical Garden),
Puducherry. Ph : 0413 2335090

# இதர நிகழ்வுகள்....

கடந்த 29-09-2011, அன்று சுமை ஏற்றும் / இறக்கும் தொழிலாளர் பிரச்சனை தொடர்பாக நடைபெற்ற வணிகர்கள், காவல் துறை கலந்துரையாடல் கூட்டம் தொடர்பாக, முதுநிலை காவல் கண்காணிப்பாளர் (சட்டம் & ஒழுங்கு) திரு. வி.ஜெ. சந்திரன் இ.கா.ப., அவர்களுக்கு 07-10-2011, அன்று மேற்படி கூட்டத்தின் முடிவுகளை நடைமுறைப்படுத்தும்படிக் கோரி மனு அளிக்கப்பட்டது.

புதுச்சேரியில் உள்ள திருமண மண்டபங்கள், ஒட்டல்களில், வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களால் ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளை விற்பனை செய்வது அதிகரித்து அந்தத் தொழில் செய்யும் புதுச்சேரி வணிகர்கள் கடுமையான பாதிப்பிற்குள்ளாகியுள்ளதால் அந்தப் பிரச்சனை குறித்தும், அதனை உரிய நடவடிக்கை எடுத்து தடுக்கக்கோரியும் 11-10-2011 அன்று வணிக வரித்துறை ஆணையர். திரு. எம். ராஜசேகர் அவர்களை பொதுச்செயலாளர் சு.குணசேகரன் தலைமையில் இணைச்செயலாளர், க. முகம்மது சிராஜ் பொருளாளர் ச. தண்டபாணி (எ) ராஜா, மற்றும் புதுச்சேரி ரெடிமேட் கார்மென்ட் டிரேடர்ஸ் சங்கப் பொறுப்பாளர்கள் உறுப்பினர்களுடன் நேரில் சந்தித்து மனு அளிக்கப்பட்டது. அன்று மாலை வர்த்தக சபையில், ரெடிமேட் கார்மென்ட்ஸ் டிரேடர்ஸ் அசோசியேசன், உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. இரவு மாண்புமிகு. முதல்வர் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

புதுச்சேரி இன்டஸ்டிரியல் பாலிசி - 2011, குறித்து நமது கருத்துக்களைக் கேட்டு, புதுச்சேரி அரசு, தொழில் மற்றும் வணிகத்துறை, இயக்குநர் அவர்கள் கடிதம் அனுப்பியிருந்தார். மேற்படி கடிதத்திற்கு 11-10-2011 அன்று உரிய பதில் உடனடியாக அனுப்பபட்டு, புதுச்சேரி இண்டஸ்டிரியல் பாலிசி-2011 உடனடியாக அமுல்படுத்தும் படி கோரியுள்ளோம்.

புதுச்சேரி, நேரு வீதி, காந்தி வீதி சந்திப்பில் பண்டிகைக் காலங்களில் நடைபாதைகள் ஆக்கிரமிக்கப்படுவதால், வணிகர்களும், பொதுமக்களும் கடுமையான சிரமத்திற்குள்ளாவது குறித்து முதுநிலைக் காவல் கண்காணிப்பாளர் (சட்டம் & ஒழுங்கு), காவல் கண்காணிப்பாளர் (போக்குவரத்து) ஆகிய இருவருக்கும் 22-10-2011, அன்று மனு அளிக்கப்பட்டது. நமது மனுவினை ஏற்று உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

புதுச்சேரி அரசின், லஞ்ச ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு, மக்கள் குறை கேட்புக் கூட்டம், 28-10-2011 அன்று வணிகவரித்துறை தொடர்பாக நடத்தப்பட்டது. வணிகவரித்துறை ஆணையர், துணை ஆணையர், உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் வர்த்தக சபை சார்பாக தலைவர் திரு. கே.ஏ. செண்பகராஜன் அவர்கள் கலந்துகொண்டு GST வரியை மற்ற மாநிலங்களில் அமல்படுத்திய பின்னரே புதுச்சேரியில் அமல்படுத்தவேண்டும். யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் குறைவான வரிவிகிதம் இருக்க வேண்டும் அப்போதுதான் வெளிமாநிலங்களில் இருந்து பொருட்களை வாங்க மக்கள் வருவார்கள், அரசுக்கு வருவாய் அதிக அளவில் கிடைக்கும் எனவே அதற்கேற்றாற் போல் அமல்படுத்தவேண்டும் எனகோரிக்கை விடுத்தார். புதுச்சேரி வர்த்தக சபை, மற்றும் புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவசக் கண் பரிசோதனை முகாம் 06-11-2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையில் நடைபெற்றது. இந்த கண் இலவசப் பரிசோதனை முகாமில் வர்த்தக சபை உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினர், உறுப்பினர்களின் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் வர்த்தக சபையில் பணியாற்றும் ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர். 145 நபர்கள், 31 பணியாளர்கள் உள்பட கண் பரிசோதனை செய்துகொண்டனர். 45 நபர்களுக்கு கண்ணாடி அணிந்துகொள்ள பரிந்துரைக்கப்பெற்றது. 85

நபர்களுக்கு சர்க்கரை நோய் உள்ளது கண்டறியப்பட்டு மருத்துவ ஆலோசனை வழங்கப் பெற்றது. முடிவில் அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவர்களுக்கு திரு. கே. ஏ. செண்பகராஜன், தலைவர் மற்றும் திரு. ப. ராஜேந்திரன், துணைத்தலைவர் மற்றும் திரு. சு. குணசேகரன், பொதுச்செயலாளர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். திரு. ச. தண்டபாணி (எ) ராஜா, பொருளாளர், திரு. மு. சிவசங்கர், முன்னாள் தலைவர், திரு. சு. முகம்மது சிராஜ், இணைப் பொதுச்செயலாளர், திரு. டி.ஜி. ஆனந்த முருகேசன், திரு. ப. தணிகாசலம், திரு. க. வெங்கடேசன், திரு. எல்.பி. ரவி, ஆகிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் முன்னிலை வகித்து முகாமினைச் சிறப்பித்தனர்.

மேலும், புதுவையில் ரவுடிகளின் அட்டகாசம் பற்றியும் அதைத்தடுத்து நிறுத்தக்கோரியும் **08-11-2011** அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் கொடுக்கப்பெற்றது. அதன் விளைவாகச் சில ரவுடிகளைக் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். வர்த்தக சபை தொடர்ந்து உறுப்பினர்களுக்கும் வணிகப் பெருமக்களுக்கும் அவர்களது கடைகள், நிறுவனங்களுக்கு, பாதுகாப்பும் அது தொடர்பான அனைத்துவிதமான எப்போதும் செய்யத் தயாராக உள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**22-11-2011** அன்று வணிக வரித்துறை ஆணையர் நடத்திய கலந்துரையாடல் கூட்டத்தில் வர்த்தக சபை தலைவர், பொதுச்செயலாளர், ஆகியோர் பங்கேற்று மத்திய விற்பனை வரி CST **2%** விழுக்காடாக உள்ளதை நீக்க மாண்புமிகு மத்திய நிதித்துறை அமைச்சர் அவர்கள் மக்களவையில் கூறியதை நினைவுபடுத்தி, அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மத்திய அரசு **51** விழுக்காடு அன்னிய நேரடி முதலீட்டை சில்லரை வணிகத்தில் அனுமதியளித்ததைத்தொடர்ந்து Multi National Companies (MNC) பன்னாட்டு வணிக நிறுவனங்கள் இந்தியாவில் வணிகம் செய்ய வருவதைத் தடுக்க **28-11-2011** அன்று வர்த்தக சபையில் பல்வேறு வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேலும் **01-12-2011** வியாழக்கிழமை காலை **11-00** மணிக்கு ஊர்வலமாகச் சென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை, சந்தித்து மனு அளித்தோம் தவிர (புதுச்சேரி அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், மத்திய அரசின் அறிவிப்பை திரும்பப் பெறவேண்டியும் **01-12-2011** அன்று ஒரு நாள் கடையடைப்பு செய்து நமது எதிர்ப்பை தெரியப்படுத்தினோம். அதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் வர்த்தக சபையின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வர்த்தக சபை, புதுச்சேரி மற்றும் SIRC புதுச்சேரி கிளை, பட்டைய கணக்காளர்கள் / தணிக்கையாளர்கள் நிறுவனமும் இணைந்து **30-11-2011** மாலை **4-00** மணியளவில் புதுச்சேரி, காமராஜர் சாலை, ஓட்டல் அண்ணாமலையில் திரு. B.K. மிஸ்ரா அவர்கள், முதன்மை ஆணையர், வருமான வரித்துறை IV, சென்னை, மற்றும் திரு. ஸ்ரீதர் அவர்கள், ஆணையர் வருமான வரித்துறை, புதுச்சேரி அவர்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்தியது. கூட்டத்தில் திரு. T. பழனியப்பன், தலைவர், SIRC புதுச்சேரி கிளை மற்றும் வருமானவரித் துறை அலுவலர்கள் மற்றும் வர்த்தக சபை உறுப்பினர்கள் பட்டைய தணிக்கையாளர், பங்கேற்று, எழுப்பிய அனைத்து கேள்விகளுக்கும் முதன்மை ஆணையர் அவர்கள் பதில் அளித்தார்.

நமது உறுப்பினர் சங்கமான புதுச்சேரி இரும்பு வியாபாரிகள் சங்கத்தின் புதிய நிர்வாகக்குழு **20-11-2011** அன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவராக, திரு. கே.ஆர். அப்துல் ரவூப், அமைப்பாளராக திரு. ஏ.கே. பஷீர் அகமது, உள்ளிட்ட புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. புதிய நிர்வாகக்குழுவின் பதவியேற்பு விழா **25-12-2011** அன்று வர்த்தக சபை, வரவேற்பு அரங்கில் நடைபெற்றது. விழாவில் தலைவர். கே.ஏ. செண்பகராஜன் அவர்கள் கலந்துகொண்டு புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

பொதுக்குழு பற்றிய சில சிறப்பு அம்சங்கள்
நடைபெற்ற இடம் புதியது, நவீன மயமானது,
ஆண்டறிக்கை புதிய வடிவமைப்பு

நமது வர்த்தக சபையின் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் கடந்த 18-12-2011 அன்று, புதுச்சேரி ஒட்டல் ஆனந்தா-இன் கன்வென்சன் சென்டரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் கே. ஏ. செண்பகராஜன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பொதுச் செயலாளர் சு. குணசேகரன் அவர்கள் பொதுக்குழுத் தீர்மானங்களை முன்மொழிந்தார் பொருளாளர். ச. தண்டபாணி (எ) ராஜா அவர்கள் கடந்த 2010-2011 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை பதிவு செய்தார். உறுப்பினர்களின் கலந்துரையாடல்களுக்குப் பின்னர். பொதுக்குழுவில் சட்டவிதித்திருத்தம் (Amendments) குறித்து உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, ஒட்டெடுப்பில் பெரும்பான்மைபெற்று, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. உறுப்பினர் விதித்திருத்தம் (Amendments) உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் ஏற்கப்பட்டது. முடிவில் இணைச்செயலாளர் க. முகம்மது சிராஜ் அவர்கள் நன்றி கூற, அடுத்த விழாவிற்குரிய நிகழ்ச்சிகள் தொடங்கின.

ஆயுட்கால உறுப்பினர் சந்தா 15,000/- (ஒருமுறை)

ஆண்டுச் சந்தா உறுப்பினர் 2000/- (ஒவ்வோர் ஆண்டுக்கும்)

நுழைவுக்கட்டணம் 3000/- (முதல் முறை)

ஆயுட்கால உறுப்பினராக 15 ஆண்டுகால வணிகம் செய்திருத்தல் வேண்டும்.

ஆண்டுச் சந்தா உறுப்பினராக 3 ஆண்டுகாலம் வணிகம் செய்திருத்தல் வேண்டும்.

பொதுக்குழுவிற்குப் பிறகு இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றது. ஒன்று 2000 - 2011 ஆண்டு வரையிலான உறுப்பினர்கள் பற்றிய அனைத்து விபரங்கள் வர்த்தக சபையின் தோற்றம்; புதுச்சேரியின் வரலாறு, புதுச்சேரியிலுள்ள வழிபாட்டுத் தலங்கள்; புதுச்சேரியிலுள்ள அனைத்து அதிகாரிகளின் தொலைபேசி எண்கள், பிரபல ஒட்டல்களின் தொலைபேசி எண்கள், முக்கிய மருத்துவமனை தொலைபேசி எண்கள், புதுவையில் பார்க்க வேண்டிய இடங்கள் போன்ற பல செய்திகள் அடங்கிய Members Directory-யினை மாண்புமிகு. தொழிலாளர் நலம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. பெ. ராஜவேலு அவர்கள் வெளியிட்டார். அடுத்ததாக வர்த்தக சபையின் இணைய தளத்தை (Website) தொடங்கி வைத்து, சில உறுப்பினர்களுக்கு Laminated Members Certificate வழங்கி கௌரவம் செய்தார். மேலும், நமது அழைப்பினை ஏற்று வருகை தந்து வாழ்த்துரை வழங்கிய அன்பிற்குரிய திரு. சோழநாச்சியார் ராஜசேகர் அவர்கள் தலைவர், சென்னை தமிழ் வர்த்தக சபை அவர்களுக்கு சிறப்புச் செய்து Titan கைகடிகாரம் அன்பளிப்பு வழங்கியதை பெருமிதத்துடன் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவருடன் வருகை தந்த சென்னை தமிழ் வர்த்தக சபையின் நிர்வாகிகள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர். மிகச்சிறப்பான மதிய விருந்துடன் நிகழ்ச்சிகள் முடிவுற்றது.

**நமது வர்த்தக சபை சார்பாக**
**மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம்**
**கொடுக்கப்பட்டுள்ள மனுக்கள் விபரம் :**

1. வணிகர் நலவாரியம் அமைப்பது தொடர்பாக.
2. கேரளாவில் உள்ளது போன்ற சுமை ஏற்றி இறக்குவதற்கான தனிச் சட்டம் இயற்றக் கோருதல் தொடர்பாக.
3. நேரு வீதியில் உள்ள பழைய சிறைச்சாலையினைச் சீர் செய்து உரிமையாளர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் அதிகாரிகளின் வாகனங்களை நிறுத்திட வசதி செய்வது பற்றியது.
4. புதுச்சேரி கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சட்டம் 1964-ல் இருந்து அனைத்து விடுமுறை நாட்களிலும் (ஆண்டு முழுவதும்) திறந்து வணிகம் செய்வதற்கு உரிய அனுமதி வழங்கக் கோரி கடிதம் அளித்தது தொடர்பாக
5. வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டாம் தர ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளை விற்பனை செய்வதை தடுக்க நடவடிக்கைக் கோருதல் தொடர்பாக
6. புதுச்சேரியில் ரவுடிகள் அட்டகாசத்தை தடுக்கக்கோரி மனு அளித்தது தொடர்பாக

# IFB POINT

IFB
www.ifbappliances.com

OVER 3 MILLION SATISFIED CUSTOMERS



Cooker Hood | Built in Hob — Built in Oven — 100% Clothes Dryer — Front Loader — Top Loader — Dishwasher — Microwave Oven

FINANCE AND EXCHANGE AVAILABLE

4 YEARS 100 % Warranty

10 YEARS Spare parts Support

IFB Loyalty Programme

IFB CARE — IFB AT HOME

1860 4255678 (for BSNL and MTNL) | 39004321 (for others) | SMS 'IFB' to 58888 | ORDER ON PHONE

customerservice@ifbglobal.com . marketing@ifbglobal.com

For more details or product registration log on to www.ifbappliances.com

**202, Chetty Street, Pondicherry - 605 001. Contact: 0413 - 4506070, 9500918090**

# TOTALGAZ




## M/s. Vaishali Traders

**# 155, Annasalai, Pondicherry - 605 001.**

Cell : 94435 34966, Tel : 0413 - 2223030
Website : www.total.co.in - e-mail : elfraja@yahoo.co.in

# இதர நிகழ்வுகள்....



வெளி மாநில வணிகர்கள் புதுச்சேரியில் கண்காட்சி என்ற பெயரில் வணிகம் செய்வதை தடுக்கக்கோரி *11-10-2011*, அன்று வணிகவரித்துறை ஆணையரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



*06-11-2011* அன்று வர்த்தகசபை உறுப்பினர்கள் மற்றும் அவர்களது நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் வர்த்தக சபை ஊழியர்களுக்கு நடைபெற்ற கண் சிகிச்சை முகாம்

# இதர நிகழ்வுகள்....



சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீட்டை தடைச் செய்யக் கோரி - 28-11-2011 அன்று நடைபெற்ற வர்த்தக சபை மற்றும் வணிகர் சங்கங்களின் ஆலோசனைக் கூட்டம்



சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீட்டை தடைச் செய்யக்கோரி மாண்புமிகு. புதுச்சேரி முதல்வர் அவர்களிடம் 1-12-2011 அன்று கோரிக்கை மனு அளிக்கப்பட்டது

# இதர நிகழ்வுகள்....



வர்த்தக சபை பொதுக்குழுக்கூட்டத்தை தலைவர். கே.ஏ. செண்பகராஜன் தலைமை எற்று தொடங்கி வைக்கிறார். உடன் பொருளாளர் ச. தண்டபாணி (எ) ராஜா, பொதுச்செயலாளர் சு. குணசேகரன், துணைத்தலைவர். ப, ராஜேந்திரன், இணைச்செயலாளர் க. முகம்மது சிராஜ்




வர்த்தக சபை உறுப்பினர்கள் கையேட்டை (Member's Directory) மாண்புமிகு. சுற்றுலா மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பெ. ராஜவேலு அவர்கள் வெளியிட சென்னை தமிழ் வர்த்தக சபை தலைவர். சோழநாச்சியார் ராஜசேகர் பெற்றுக்கொண்டார்,




வர்த்தக சபையின் இணையதளத்தை மாண்புமிகு சுற்றுலா மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பெ. ராஜவேலு அவர்கள் தொடங்கி வைக்கிறார். உடன் சென்னை தமிழ் வர்த்தக சபை தலைவர். சோழநாச்சியார் ராஜசேகர்

## வரலாற்றிலிருந்து.......

பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியை ஆண்டபோது முதலில் 1806-ஆம் ஆண்டு பைமாஷ் என்ற நிலஅளவைக் குறிப்பேடுகளை ஏற்படுத்தினார்கள். அதன்படி 1806 முதல் 1887வரை நிலவரி வசூலிக்கப்பட்டது.

1887-ஆம் ஆண்டு முசியே கேன்தன் என்ற பிரெஞ்சுப் பொறியாளர் கதாஸ்தர் செய்யும் பணியை மேற்கொண்டார்.

1910-ல் புதுச்சேரியிலும், 1912-ல் காரைக்காலிலும் 1929-ல் மாகேயிலும், 1887-ஆம் ஆண்டிலே ஏனாமிலும் முடித்துக் கொடுத்தார்.

அதன் பின்னர், மறுஅளவை (Re-Servey) பணி 1967-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு. 1974ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது அப்போது மொத்தப்பரப்பளவு 410.16 சதுரகிலோ மீட்டர், நில உரிமையாளர்களின் மொத்த எண்ணிக்கை 62,222 பேர் மொத்த நில வருவாய் ரூ. 5,28,180

## அனைவரின் கவனத்திற்கு !

நமது செய்திவெளியீடுக்கு விளம்பரம், படைப்புகள், மற்றும் செய்திகள் அளிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

அலுவலகச் செயலாளர், வர்த்தக சபை, புதுச்சேரி - 1 • 0413 - 2338615

வர்த்தக சபையின் உறுப்பினர்கள் கையேட்டை (Member's Directory 2000 - 2011) இதுவரை பெறாத உறுப்பினர்கள் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுச் செல்லும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எண். 1, சுய்ப்ரென் வீதி, புதுச்சேரி - 605 001.
தொலைபேசி : 2338615 • தொலை நகல் : 0413 - 2338615
இணையதளம் : chambredecommerce.in
மின்னஞ்சல் : pcc1849@gmail.com / ccp_1849@yahoo.in

Publisher : K.A. SHENBAKARAJAN, PRESIDENT, CHAMBRE DE COMMERCE, No. 1, Rue Suffren, Puducherry - 605 001.
Printed at : MOTHER'S GRACE PRINTERS & GRAPHICS, No. 7, Sagayamatha Street, Muthiyalpet, Puducherry - 3.

916 BIS Hallmarked Jewellery

# தொடர்ந்து 3 ஆண்டுகளாக

# செய்கூலி இல்லை

## மிக மிக குறைவான

## சேதாரம் மட்டுமே...

மேலும் சிறப்பு சலுகையாக

**ஜர்க்கான் மற்றும் சாதா கற்களுக்கு விலை முற்றிலும் இல்லை**



Since 1964

Conditions apply

தங்க நகை
சிறுசேமிப்பு திட்டத்தில்
சேர்ந்து பயனடைவீர்

பாரதி வீதியில் உள்ள
தங்க மாளிகை மட்டும்
பிரதி ஞாயிறு கடை உண்டு
செவ்வாய் விடுமுறை

மாசற்ற பொன்னகையில் மலர்ந்திடும் புன்னகை

# Thanga Maaligai

P.R.Gold & Silver Craft

P.R.Thanga Maaligai ®

No.79 & 81, Kosakadai Street - Ph: 2338318 &
Branch: 182, Bharathy Street - Ph: 2348679 , Pondicherry-1

Registrar of Newspaper for India, New Delhi Licence No. PONTAM00433/32/1/2012-TC




Atriumn Lobby • Centrally Air - Conditioned • 58 Standard Rooms • 6 Executive Rooms • 6 Suite Rooms • Complimentary Breakfast • Roof Top Swimming Pool • Gym • 24 Hrs Room Service • Business Centre • 24 Hrs Check Out Time • Multi-Cuisine Restaurant • Pure Veg Restaurant • Bar • Laundry • Travel Desk • 4 Banquet Halls (25 pax to 250 pax) • Money Exchange • Wi-Fi Prepaid Card • Spacious Car Parking • Doctor on Call • Heart of City Location • Boutique Shop • Florist Shop.

HOTEL ANNAMALAI INTERNATIONAL ★★★
PONDICHERRY

479, Kamaraj Salai, Saram, Pondicherry-13. Ph: 0413-2247001-14. Fax : 0413-2247015.
Email: info@hotelannamalai.com www.hotelannamalai.com







HAVELI
VEGETARIAN RESTAURANT

THE RENAISSANCE ROOM
MULTI CUISINE RESTAURANT

COURT OF BACCHUS
PUB RESTAURANT

MOUNT AQUARIUS
TERRACE POOL SIDE BAR-BE-CUE

THE PRINCE COURT
250 Pax Conference Hall

THE DURBAR HALL
200 Pax Conference Hall

THE SENATE HALL
100 Pax Conference Hall

ANNAMALAI BOARD ROOM
25 Pax Conference Hall